# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

## (உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம்பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதுக. **3x4=12**

1. இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும், இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை?

2. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க உரைப்பன யாவை?

3. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?

4. அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவழகனார் கருதுதற்குக் காரணங்கள் யாவை?

5. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு. வி.க. கூறுவன யாவை?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக. **3x4=12**

6. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுவது யாங்ஙனம்?

7. உவமைகளைக் கையாளும் விதத்திலேயே திருவள்ளுவர் நயமுண்டாகக் குறளமைத்திருப்பதை விளக்குக.

8. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை?

9. அகழ்வாய்வால் வெளியிடப்பட்ட கட்டடங்கள் பற்றி எழுதுக.

10. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக. **1x6=6**

11. நம் தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக. **2x10=20**

13. 'மகன்' அல்லது 'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'வேலி' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'ஒவ்வொரு கல்லாய்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**அல்லது**

கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

**அல்லது**

நீவிர் சாலையோரம் பிச்சையெடுத்த குழந்தையை எடுத்து வளர்த்து, வாழ்க்கையில் உயரவைத்து, சாதனை படைத்ததாக கற்பனைக் கதையொன்று எழுதுக.

**V.** 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச் சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

நீலத் திரைக்கட லோரத்திலே -நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் - மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

- பாரதியார்

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. **3x2=6**

16. Practice makes a man perfect

17. Many a slip between the cup and lip

18. Too much of anything is good for nothing

19. "Villages are the back bone of our country" said Gandhiji

20. A crying child will get milk

21. Hard work and self - confidence are the main sources for our success

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. **1x4=4**

(அ) பணம் பத்தும் செய்யும்

(ஆ) உழைப்பின்றி ஊதியம் இல்லை

(இ) பேராசை பேரிழப்பு

**அல்லது**

**'மழை'** அல்லது **'நாடு'** என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.

VI மற்றும் VII -ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஏற்ற விடையை எழுதுக. 5x2=10

நாடு முன்னேற மக்களைக் கல்வியறிவு பெற்றவர்களாகவும், நற்சிந்தனையாளர்களாகவும் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகவும் ஆக்குதல் இன்றியமையாதது. இது மெய்ப்படப் பல்துறை நூல்கள் அடங்கிய பொது நூலகங்கள் நாடு முழுவதிலும் திறக்கப்படவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றது. நூல் ஒன்று தனி ஒருவரிடம் இருந்தால் அதன் பயன் பிறருக்குக் கிடைக்காது. ஆனால் அதே நூல், பொது நூலகத்தில் வைக்கப்பட்டால் பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததைப் போன்று அது பலர்க்கும் பயன்படும். அதனால் இந்தியா உட்பட, உலக நாடுகள் அனைத்திலும் மக்களுக்கான பொது நூலகங்கள் திறக்கப்பட்டன.

மாணவர் ஒவ்வொருவரும் நூலகங்களுக்குச் சென்று அங்குக் கிடைக்கும் அறிவுச் செல்வத்தினைத் தவறாமல் பெறுதல் வேண்டும். உள்ளூர்ச் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை பல்வேறு பொது அறிவுச் செய்திகளையும் பெற்றுப் பயனடைய வாய்ப்பு நல்குவது நூலகமே. மாணவர்களாயினும் மற்றோராயினும் அனைவரது அறிவுப்பசியையும் போக்கும் சிறப்பான இடம் நூலகமாகும். மின்னணுக் காலமான தற்காலத்தில் நூலகங்களில் உள்ள நூல்கள் மின்னணு மயமாக்கப்பட்டு வருகின்றன. இணையத்தள நூலகம், குறுவட்டுகள், மின்னணு ஒளிவட்டு, நுண்சுருள் முதலிய வேறுசில வடிவங்களிலும் நூல்கள் உருமாற்றம் பெற்று, நூலகப் பயன்பாட்டில் உள்ளன.

பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களும் அதிக விலையுள்ள நூல்களைச் செலவின்றிப் படித்துப் பயன் பெறலாம். எத்துறை சார்ந்த நூலையும் அச்சில் இல்லாத பல அரிய புத்தகங்களையும் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. பலதுறை நூல்களையும் ஒரே இடத்திலும் வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கும் வசதியும் உள்ளது. வீட்டிலிருந்தபடியே நூல்களைப் படிக்க வகைசெய்யும் மின்னணு நூலகங்களும் உள்ளன.

வினாக்கள் :

16. நூல் ஒன்று நூலகத்தில் வைக்கப்பட்டால் எது போலப் பயன்படும்?

17. நூலகம் மாணவர்களுக்கு எவ்வகைச் செய்திகளை நல்கும்?

[ திருப்புக

18. மாணவர்களின் எப்பசியை நூலகம் போக்கும்?

19. தற்கால நூல்கள் எந்நிலைக்கு மாற்றப்பட்டு வருகின்றன?

20. நூல்களின் சில உருமாற்ற வடிவங்களைக் கூறுக.

21. வீட்டிலிருந்து படிக்கும் வகை நூலகம் எது?

22. நூலகத்தினால் விளையும் நன்மைகள் யாவை?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடியது.
(வாக்கியப் பிழையைத் திருத்தி எழுதுக)

24. அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்து சிறந்தான்?
(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)

25. குறவளை வலியால் முழுங்க முடியாமல் மூச்சு முட்ட முழித்தான்.
(தொடரில் உள்ள கொச்சைச் சொற்களை திருத்தி எழுதுக.)

26. சிட்டி லைப்பைத்தான் ஒய்ப் லைக்பன்றா.
(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

27. நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்.
(தேவையற்ற இடங்களில் உள்ள வல்லெழுத்துகளை நீக்கி எழுதுக.)

28. விலக்கு நன்றாக எறிந்தது.
(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.)

29. நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.
(வடசொற் கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

**30.** காட்ல யானை கத்தியது, புலி சத்தமிட்டது.

(மரபு வழுக்களை நீக்கி எழுதுக.)

**31.** அரை - அறை அல்லது ஆனி-ஆணி பொருள் வேறுபாட்டை உணர்ந்து அதனைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

**32.** இத்துணை நயம்பட வயிற்றுப் பெருமான் பொருட்டு என்ற தொடரால் எவ்வளவு அரிய பெரிய நீதிகளை அறநெறிச்சாரச் செய்யுள் காட்டுகிறது.

(பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டெழுதுக.)

-o0o-